# Forum of BSNL Unions and Associations

## தமிழ் மாநிலம்

தலைவர்: R.பட்டாபிராமன் கன்வீனர்: S.செல்லப்பா

அன்புமிக்க தோழர்களே,

அகில இந்திய Forum of BSNL Unions and Associations விடுத்த அறைகூவலை ஏற்று இன்று (12.03.2015) சென்னையில் பத்திரிக்கையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழக Forum கன்வீனர் தோழர் S.செல்லப்பா, தலைவர் தோழர் R.பட்டாபிராமன் உள்ளிட்ட அனைத்து சங்க தலைவர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சன், ராஜ், மக்கள், இமயம், பாலிமர், தந்தி, சத்யம், விண், வேந்தர் உள்ளிட்ட தொலைகாட்சிகளும், தினமலர், தீக்கதிர், தினகரன், ஹிந்து உள்ளிட்ட செய்தி தாள் நிருபர்களும் கலந்துகொண்டனர்.

பத்திரிக்கையாளர் சந்திப்பு மிகவும் உற்சாகமாக நடைபெற்றது. பத்திரிக்கையாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு நமது Forum கன்வீனர் தோழர் S.செல்லப்பா பதிலளித்தார்.

ஏப்ரல் 21,22 இரண்டு நாள் வேலை நிறுத்த கோரிக்கைகளை விளக்கி பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது. இத்துடன் பத்திரிக்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

தோழமையுள்ள,

R.பட்டாபிராமன் S. செல்லப்பா
Forum தலைவர் Forum கன்வீனர்

# FORUM OF BSNL UNIONS / ASSOCIATIONS
# TAMIL NADU CIRCLE

## பத்திரிக்கை குறிப்பு

சென்னை

12.03.2015

BSNL நிறுவனம் 2009ம் ஆண்டு முதல் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. 2004ம் ஆண்டு 10,000 கோடி லாபம் ஈட்டிய BSNL நிறுவனம் நஷ்டத்தில் போனதற்கு அடிப்படை காரணம் அரசாங்கத்தின் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவான கொள்கையே ஆகும். பொதுத் துறைகளை தனியாருக்கு தாரை வார்க்கும் நிகழ்வுகள் தொடர்கின்றன. BSNLக்கு பிரித்தியேகமாக சலுகைகள் ஏதும் வேண்டாம். தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு இணையாக பாவித்தால் போதும்.

2009 ஆண்டு முதல் BSNL நிறுவனம் அடைந்துள்ள நஷ்டம் ரூ.31691.81 கோடியாகும். இந்த நஷ்டத்திற்கு என்ன காரணம்?

- சேவைகள் மிக கடுமையாகவும், மோசமாகவும் பாதிக்கப்படுவதற்கு அடிப்படையான காரணம் மொபைல் கருவிகள், Broad Band Modem, Drop Wire, தொலைபேசி கருவிகள், கேபிள் உள்ளிட்ட கருவிகள் பற்றாக்குறையாக உள்ளதுதான். BSNLன் சேவைத் தரங்களை உயர்த்த தேவையான டவர்கள் உள்ளிட்ட கருவிகள் வாங்குவதற்கு உதவியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து BSNL நிறுவனம் கடன் பெறுவதற்கு மோடி அரசு உதவி செய்யவேண்டும். அதானிகளுக்கும், அம்பானிகளுக்கும் உதவும் மோடி அரசு BSNLக்கு உதவுவது இந்திய நாட்டிற்கே நல்லதாகும்.
- 2007ம் ஆண்டு BSNL நிறுவனம் 45 மில்லியன் புதிய செல் சேவை இணைப்புகளை கொடுப்பதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்குரிய டெண்டரை ரத்து செய்யப்பட்டது. தனியார் நிறுவனங்களுக்கு இது ஆதரவான செயலாகும். BSNL செல் சேவை வழங்க முடியாமல் தத்தளிக்கும். எனவே BSNLஐ காப்பாற்ற அனைத்து ஊழியர்களும் அதிகாரிகளும் 11.07.2007 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். அதன் பின் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் தொலைத் தொடர்பு அமைச்சர் 22.5 மில்லியன் இணைப்புக்களுக்கான கருவிகளை வாங்குவதற்கு ஒத்துக்கொண்டார்.
- 2010ம் ஆண்டில் BSNL நிறுவனம் கோரிய 93 மில்லியன் இணைப்புக்களுக்கான டெண்டர் ரத்து செய்யப்பட்டது. என்ன காரணம் தெரியுமா? சீன நாட்டைச் சேர்ந்த Huwaie நிறுவனத்திடமிருந்து உபகரணங்கள் பெற்றால் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து என ராணுவ அமைச்சகமும், தலைமை தணிக்கை அதிகாரியும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆனால் இதே நிறுவனத்திடமிருந்து தனியார் கம்பெனிகள் இறக்குமதி செய்வதை மத்திய அரசு தடுக்கவில்லை. தேச பாதுகாப்பு எனில் தனியாருக்கு பொருந்தாதா?

- BSNL ஐ பொதுத் துறை நிறுவனமாக அரசாங்கம் மாற்றியபொழுது கொடுத்து வாக்குறுதிகள் என்னவென்று பார்ப்போம்
    1. கிராமப்புற தொலைபேசி சேவையை சேவை நோக்கோடு BSNL கொடுப்பதால் ஏற்படும் நஷ்டத்தை அரசே ஏற்கும் என வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 8000 கோடி ரூபாய் BSNLக்கு நஷ்டமாகிறது. கடந்த 13 ஆண்டுகளில் ஏற்பட்ட நஷ்டம் 1,04,000 கோடியாகும். ஆனால் இந்திய அரசாங்கம் BSNLக்கு இது வரை மொத்த நஷ்ட ஈடாக ரூ 41,370 கோடி மட்டும் கொடுத்துள்ளது. மீத தொகையை 63,630 கோடி ரூபாயை இது வரை BSNLக்கு கொடுக்கவில்லை.
    2. BWA Spectrumத்தை 6 மாநிலங்களில் (குஜராத், மகாராஸ்ட்ரா, ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கொல்கொத்தா) BSNL அரசாங்கத்திற்கு திருப்பி கொடுத்துவிட்டது. எனவே மத்திய அரசு 6724.51 கோடி ரூபாயை BSNLக்கு திருப்பித் தரவேண்டும். இதுவரை மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் நிதி வரவில்லை.

எனவே BSNL நிறுவனத்தின் நஷ்டத்திற்கு அரசாங்கத்தின் கொள்கைகளே காரணமாகும். மேலும் BSNLஐ நலிவடையச் செய்ய அரசாங்கம் கீழ்கண்ட பரிந்துரைகளை கொடுத்துள்ளது.

1. 46.5% பங்கு விற்பனை செய்யப்பட்ட MTNL நிறுவனத்தை (18000 கோடி ரூபாய் கடன் மற்றும் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வரும்) BSNLவுடன் இணைப்பது.
2. லாபம் தரக்கூடிய Broadband சேவையை BSNLலிடமிருந்து பிரித்து BBNL என்ற துணை நிறுவனத்தை உருவாக்குவது.
3. 60 சதமான ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பும் Deloitee கமிட்டி பரிந்துரைகளை அமலாக்குவது.

இந்த பரிந்துரைகள் அமலானால் BSNL உடனடியாக பெரும் நஷ்டத்தில் செல்லும். எனவே BSNL நிறுவனத்தை நஷ்டத்திலிருந்து மீட்டு லாபமாக மாற்றி பொதுத் துறையாக நீடிக்க BSNL நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களும், அதிகாரிகளும் ஒன்றாக இணைந்து "Forum of BSNL Unions and Associations" என்ற அமைப்பின் கீழ் போராடிவருகிறோம்.

- பிப்ரவரி 25ம் தேதியன்று டெல்லியில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட பேரணி நடத்தப்பட்டது.
- BSNL ஐ காப்போம் என்று ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து பெரும் இயக்கம் நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக இந்திய நாட்டு பிரதமர் திரு மோடி அவர்களிடம் பிப்ரவரி 25 அன்று 25 லட்சம் கையெழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மோடி அரசாங்கம் கோரிக்கைகளை தீர்க்காவிடில் இந்திய நாடு முழுவதும் ஏப்ரல் 21,22 தேதிகளில் வேலை நிறுத்தத்தை நடத்த உள்ளோம்.

ஏப்ரல் 21,22 - வேலை நிறுத்த கோரிக்கைகள்

1. Broad Band நிறுவனத்தை (BBNL) BSNL உடன் இணைக்கவேண்டும்.
2. கிராமப்புற தொலைபேசி கொடுப்பதால் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கமே ஈடுகட்டவேண்டும்.
3. BSNL விரிவாக்கத்திற்கு அரசே வங்கியிடம் கடன்பெற உத்தரவாதம் கொடுக்கவேண்டும்
4. BSNL-MTNL இணைப்பு கூடாது.
5. BSNLக்கு இலவசமாக ஸ்பெக்ட்ரம் வழங்கவேண்டும்.
6. மத்திய மாநில அரசு மற்றும் பொதுத் துறைகளில் BSNL சேவைகளை பயன்படுத்துவதை கட்டாயமாக்கவேண்டும்

உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 21,22 ஆகிய தேதிகளில் நாடுதழுவிய 2 நாள் வேலை நிறுத்தம் நடைபெற உள்ளது.

மக்களின் சொத்தான பல லட்சம் கோடி மதிப்புள்ள BSNL என்ற பிரம்மாண்டமான பொதுத் துறை நிறுவனத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். பொதுமக்களின் ஆதரவும், ஊடகங்கள்/பத்திரிக்கையாளர்கள் ஆகியோரின் மேலான ஆதரவை கோருகிறது.

**R.பட்டாபிராமன்**
தலைவர்

**S.செல்லப்பா**
கன்வீனர்,